பாடப்புத்தக விசாரணை

# அச்சு நிலைய அதிபர் கூறிய சாக்ஷியம்

## "வித்தியாபகுதி ஊழல்களைத் தடை செய்ய முடியாது"

கொழும்பிலுள்ள புத்தகங்களை அச்சிட்டு வெளியாக்கும் கொம்பனி யொன்றின் மனேஜரான மிஸ்டர். விக்டர். டி. ஸில்வா சென்ற திங்கட்கிழமை மூன்றும் முறையாகப் பாடப்புத்தகக் கொமிஷன் முன்னிலையிற் சாக்ஷியம் கூறினர்.

கல்விப் பகுதியில் லஞ்சம் முதலிய ஊழல்களுக்கு முற்றுத் தேடிக் கொள்வது சாத்தியமாகக் கூடிய காரியமல்லவென்று அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"ஓரே ஒரு புத்தகம் மாத்திரமே தமக்குச் சமர்ப்பணஞ் செய்யப்பட்டிருக்கின்றதென்று கல்வி மந்திரி சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கசபையிற் கூறினர். ஆயின், இதுவரை மூன்று புத்தகங்கள் அவருக்குச் சமர்ப்பணஞ் செய்யப்பட்டு அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஒரு புத்தகத்திற்கு மந்திரி முகவுரை எழுதியிருக்கிறார். மற்றொன்றில் அவருடைய செய்தி அடங்கியிருக்கிறது. எனக்குத் தெரிந்தவரை இம்மூன்று புத்தகங்களில் ஒன்றுவது பாடப்புத்தக நிர்வாக சபையால் அங்கீகரித்துக் கொள்ளப்படவில்லை.

இப்புத்தகங்களின் மட்டையில் "கல்விமந்திரியால் அங்கீகரிக்கப்பட்டது" என்னும் வார்த்தைகளை காணப்படுகின்றன.

ஆசிரியர்களினதும் பதிப்பாளர்களினதும் சொந்த லாபத்தை அதிகப்படுத்துவதற்காகப் பாடப்புத்தக நிர்வாகசபை அங்கத்தவர்கள் புத்தகங்களை அங்கீகரிப்பதற்கு எவ்விதம் தூண்டப்படுகின்றன ரென்பதை நிரூபிக்கத்தக்க நிலைமையில் நான் இருக்கிறேன்.

1943-ம் வருஷத்திய ஸீனியர் பரீக்ஷைக்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் புத்தகங்களின் நாமாவலி ஏறகெனவே வெளியாகிவிட்டதாக நான் கேள்விப்படுகிறேன்.

பாடப்புத்தக விசாரணைச்சபை ஒன்றை நியமிக்க வேண்டுமென்று கோரிய கூட்டமொன்றை ஆமோதித்தவர்களில் ஒருவர் கடைசி நேரத்தில் எதிர்க்கட்சியிற் சேர்ந்து கொண்டார். இதற்குச் சமானமாக அவருடைய இரண்டு புத்தகங்கள் பாடப்புத்தக நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்டன.

களுத்துறையைச் சேர்ந்த மிஸ்டர். கே. பி. ஹேமசந்திரா அடுத்தபடியாகச் சாக்ஷியம் கூறினர்.

## கடிதம்

இந்துசாதனப் பத்திராசிரியரவர்களுக்கு

ஐயா,

1-9-41 ல் வெளிவந்த இந்துசாதனத்தில் "மாயாவாத" விஷயம் எழுதப்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தை எவரும் நன்கு விளங்கிக் கொள்ளும் பொருட்டு, இதன்கீழ் வரும் ஐந்து வினாக்களுக்குத் தயவு செய்து விடையை வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

வினாக்கள்

1- "மாயாவாத" என்னும் சொற்றொடரின் பொருள் யாது?

2 மாயாவாதம் எனப் பெயரிட்டவர் யார்?

3 மாயாவாதத்துக்கு முதலாசிரியர் யார்?

4 மாயாவாத நூல்களெவை?

5 மாயாவாதக் கொள்கையின் சாரம் யாது?

மேற்படி ஐந்து வினாக்களுக்கும் கூறும் விடைகள் எவ்வெந்நூல்களில் எவ்வெப் பகுதிகளிற் கூறப்பட்டன என்பதை எவரும் உணர்ந்து கடைத்தேறும் வண்ணம் அவ்வந் நூல்களையும், பகுதிகளையும் குறிப்பிட்டு வெளியிடின் உலகோபகாரமாகவும் மேற்படி சை. ப. பா. சபையாரின் சமய வளர்ச்சி நோக்கம் இடையூறின்றி இனிது நடைபெற ஏதுவாகவு மிருக்கும்.

இப்படிக்கு

நா. பொன்னுசுந்தரம்

நாவலர் வித்தியாசாலை

யாழ்ப்பாணம்

4-8-41

இக்கடிதம் நாவலர் வித்தியாசாலையிற் பயிலும் ஒரு மாணவனால் எழுதப்பட்டதென அறியக்கிடக்கிறது; பள்ளிக்கூடப்பிள்ளைகள் எழுதியனுப்பும் ஆட்சேபங்களை வெளியிடுதல் இப்பத்திரிகையின் மரபன்றாயினும், அவ் வித்தியாசாலையிற் கல்வி பயிற்றும் திரு. வி. சின்னையா உபாத்தியாயர் இப்பத்திரிகையில் வெளியிடும்படி கேட்டுக் கொண்டமையினால் வெளியிட லானோம். இக் கடிதத்தில் வினவப்படும் பஞ்ச வினாக்களுக்கும் வல்லுநர் விடைகூறப்புகின் அது இப் பத்திரிகைப் பிரசுரங்கள் சிலவற்றுள் மாத்திரம் வெளிவந்து முடியப்போவதில்லை யெனலாம். அங்ஙனந்தான் கூறினும் அதனால் எவரும் கடைத்தேறுவரோ என்பதும் ஆசங்கைக்கிடமாம். அப்படிக் கூறுவதனால் "மேற்படி சைவபரிபாலனசபையாரின் சமய வளர்ச்சி நோக்கம் இடையூறின்றி இனிது நடைபெற ஏதுவாகு" மென்பது சபையாரிடத்துக் கேட்டறியவேண்டிய தொன்றும். சித்தாந்த சைவவிஷயமாக இப்பத்திரிகை வாயிலாக நமது ஆசிரியரும் மாணவரும் ஏதும் அறியக் காத்திருக்கலாமே யொழிய ஏனைய சமயக் கொள்கைகளை இது வாயிலாக அறியலாமெனக் காத்திருத்தல் அசம்பாவிதம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் கண்ட வித்தியாசாலையிற் கல்வி பயிற்றும் ஆசிரியரிடத்தும் மாணுக்கனிடத்துமிருந்து இப்படியான வினாக்கள் எழுந்தமை கால வித்தியாசத்தினுற் போலும்.

பத்திராசிரியர்.

## மாயாவாதத்தையிட்டு நூலாசிரியர் சிலர் எழுதிய குறிப்பு

திருகோணமலை மணிவாசக மன்றத் தலைவர் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் M. A., M. L. இயற்றிய உரையில் 'மிண்டிய மாயாவாதமென்னுஞ் சண்டமாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து' என்பதற்கு, அடிகள் காலத்திலே பௌத்தமே மாயாவாதமெனப்பட்டதென்ப. பிற்காலத்தில் ஏகான்மவாதத்துள் ஒருபகுதிமாயாவாதமெனப்பட்டது. மாயா = மயக்கம், மயல் வினைக்கு மதமென்பது கருத்து. கடவுள், உயிர், தளை முதலியன வெல்லாம் உடன்பாடாகக் கூறி, முடிவில் அவை சூனியமென்றலின் அது மருட்சி விளைப்பதாயிற்று.

சிவஞானசித்தியார்:- மாயாவாதி மதம்

(1) "காணே பிரமம் என்றனைத்து ஞாலம் பேய்த்தேரென எண்ணி ஊனேபுகுந்து நின்ற உயிர்கட்குப் பந்தங்கள் உடைத்தவரும் மாறு மதிகேடனுமாய மாயாவாதி பேசுகித் தானே உரைகளும் ஆர் நூலின் உண்மை தனைச் சற்று வாம்."

'Essentials of Hinduism' In the life of Saiva Siddhanta- By S. Sabaratna Mudaliyar;

Maya Vada:- According to this School 'Brahm' 'or the Supreme God) is only reality, all the rest being illusions Caused by Maya. Knowing self to be 'Brahm' is the final beatitude.

Sanskrit-English Dictionary by V Aman Shivaram Apte M. A.

MayaVadha

the doctrine of Illusi on, aterm applied to Buddhism: —

மாயாவாத தும்ஸசோளரி, மேலைப் புலோலி நசாவதானம்

கா. கதிரைவேற்பிள்ளை — தமிழ் மொழி அகராதி:—

மாயாவாதி: —

சுத்தமாகிய பரப்பிரமம் மாயோபாதியினாலே வாதிக்கப்பட்டுச் சீரநதினுள்ளே சீவான்மாவாக நிற்குமென்றும் சீவான்மாவும் விவேகஞானமடைந்து பரமான்மாவோடு கடாகாயமும் மஹாகாயமும் போல அபேதமாய்க் கலந்துவிடுமென்றும் சொல்லு மோர் சமயி.

பாடப்புத்தக விசாரணைச்சபை

பாடப்புத்தக விசாரணைச்சபை செப்டம்பர் மாதம் 26-ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் விசாரணை நடத்தும். இச்சபையில் முன்பு யாழ்ப்பாணத்தில் சாக்ஷியங் கொடுக்க விரும்பும் சகலரும், விசேஷமாக பெற்றோரும் செப்டெம்பர் மாதம் 16-ம் திகதிக்குப் பிந்தாமல், காரியதரிசி, பாடப்புத்தக விசாரணைச்சபை, தபாற்பெட்டி 560 கொழும்பு என்ற விலாசத்திற்கு அறிவிக்க வேண்டும்.

ஏ. கே. ஜே. கென்டேர்சன்

காரியதரிசி

பாடப்புத்தக விசாரணைச்சபை

G 19 11.9.41

## "இந்துமதம், இந்துசமயம்"

முன்பு "இந்து இளைஞர் மகாநாடு" என வழங்கி வந்த பெயரை "சைவ இளைஞர் மகாநாடு" என மாற்றிவிடவேண்டு மென்பதற்குக் காரணம் காட்டி 1940-ம் ஜூவரிமாசத்தில் கோயமுத்தூர்ச்சைவத்திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் கூறியவை:-

"இந்துமதம் இந்துசமயம் என்றபேர்கள் பெருவழக்காய் இக்காலத்தில்வழங்கி வருகின்றன. இப்படிப் பேர்உள்ள தொருசமயமோ மதமோ இல்லையென்று பலர் கருதுகிறார்கள். புறப்புறச் சமயங்களாகிய பவுத்தம், சமணம், கிறிஸ்தவம் முதலியவை அல்லாதது எதுவோ அது இந்துவென்று எதிர்மறைவழியால் தமது சமயத்தை அறிவிக்கின்றது இந்து என்பது. உலகபதார்த்தங்கள் அல்லாதது எதுவோ அது; சீவான்மாக்களல்லாதது சீவர்களுக்கு வேறுள்ளது எதுவோ அது; "மண்ணல்லை-விண்ணலல்லை வலயமல்லை மலையல்லை கடலல்லை" என்றபடி இவையல்லாதது எதுவோ அதுவென்று கடவுளிலக்கணம் எதிர்மறைவழியாக அறிவிக்கப்படுகிறது போல, இந்த இந்துமதமென்ற பெயருமாகுமென்பர் சிலர். இந்துக்களின் சட்டம்(Hindu Law) இந்துமத பரிபாலனத்தாபனம்(Hindu Religious Endowments) என்றெல்லாம் தமது அரசாங்கமுறையில் வரும் நியமங்களில் இந்து என்ற மொழிக்குப்பொருளில்லை; யாவர்தாம் இந்துக்களென்றல் அஃது எங்கும் வரையறைசெய்து விளக்கப்படவில்லை. சிலசமயங்களில், சமணர்கள் கூட இந்துஎன்ற பெயர்கொண்ட கதம்பக் கூட்டத்திலுள் கொண்டுவந்து நுழைக்கப்படுகிறார்கள். உலகாயதம் என்ற ஒருகொள்கை உண்டு. அதுநமது சமய சாத்திரங்களில் சமண புத்த சமயங்களினும் வெளியில் வைக்கப்படும் புறப்புறச் சமயமாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆறல், இந்து சமயத்தார்-இந்துக்கள் என்று கூட்டத்தாரில் எத்தனை பேர்கள் உலகாயதர்களாய் இருக்கிறர்கள்? அவர்களை இந்துக்கள் என்று சொன்னல் அது இந்த உலகத்தில் ஏற்கப்படுமா? புறச் சமயிகளாகிய மாயாவாதிகளை இந்துக்களல்லர் என்று சொன்னல், அவர்கள் சம்மதிப்பார்களா? இந்து என்ற மொழி எந்தச் சமயச் சார்பும் குறிக்காது பொதுஎல்லதொரு சங்கேத மொழியாய் ஒழிந்து நின்றது என்பர் ஆராய்ந்தார். அதனை நிச்சயம் செய்து கொள்வதும் நமது மகாராட்டிரத்துரிய செயலாகும். இத்தகைய காரணங்களினால் நம்மை இந்துக்கள் என்று வகுத்துக் கொள்வதிலும், சைவர், வைணவர், பிராமணர் என்பது முதலாக ஒவ்வோர் சமயம் பற்றிய கட்டுப்பாடுடைய பெயரால் வழங்கும்படி வைத்துக் கொள்ளுதல் சிறந்ததாகுமோ எனபது நீங்கள் கருதத் தக்கது. எத்தனது இந்த நாடு சைவம் ஒன்றே விளங்கும் பேறு பெற்றுள்ளதனல், இம் மகாநாடு அகில இலங்கைச் சைவ இளைஞர் மகாநாடு என்ற பெயரால் வழங்கப்படுவதனை நான் விரும்புகின்றேன்."


# தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரோப்ரைட்டர்"

Y 19. 4.3.41—3.3.42 K. A. இரத்தினசிங்கம்


## கிராமப் புனருத்தாரணத் தொண்டு நிலயம்

நிகழும் விருஷ வருஷம் ஆவணி மாதம் கஅ ம் திகதி(3-9-41) புதன்கிழமையன்று கிராமப் புனருத்தாரணத் தொண்டுநிலயம் அராலியில் திரு. வே. கந்தையா F.M S. Pensioner அவர்களால் தொடங்கப் பெற்றிருக்கிறது. குறித்த நிலயம் திரு. வே. கந்தையா அவர்களால், அவரால் நியமிக்கப்பெறும் ஒரு சபையின் உதவியுடன், நடாத்தப் பெறும். குறித்த நிலயத்தின் ஆதரவின் கீழ் ஓர் இலவச வாசிகசாலை அராலி தெற்கில் தொடங்கப் பெற்றிருக்கின்றது.

கடித-

## செல்வச்சந்நிதியில் புராண படனமும் சைவப் பிரசங்கமும்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதித்தலத்திலே அண்மையில் நடைபெற்ற உற்சவகாலத்திலே ஆறுந்திருவிழா தொடக்கம் தேர்த்திருவிழாவரை இராக்காலத்திலே 6½ மணிதொடக்கம் 10 மணிவரை தினமும் கந்தபுராணத்தின் ஓர்பகுதியான வள்ளியம்மை திருமணப்படலம், வண்ணார்பண்ணை ஸ்ரீமத். தம்பியப்பா உபாத்தியாயர் அவர்களாலும் புலோலி வித்துவான் ஸ்ரீநடராச பிள்ளையவர்களாலும் வேறுசில அறிஞராலும் இம்மாதம் படித்துப் பயன் சொல்லப்பட்டது. பயன் சொன்னோர் திருவிருத்தங்களிற் பொதிந்துள்ள தத்துவக்கருத்துக்களைத் தெளிவாக விளக்கினார்கள். நூற்றுக்கணக்கான அடியார்கள் சமுகமளித்துப் புராணபடனத்தைக் கேட்டு இன்புற்றார்கள். கடைசி மூன்று இரவுகளிலும் புராணபடனத்துடன் முறையே அடியார்பெருமை, திருவாசகம், புராணபடனமகிமை என்னும் பொருள்கள்பற்றி புலோலி வித்துவான் ஸ்ரீ நடராசபிள்ளையவர்களால் சொற்பொழிவாற்றப்பட்டது. பிறபெரியோர்கள் குறிப்புரை கூறினார்கள். இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றஇடம் சந்நிதிகோயிலுக்கு வடக்கிலுள்ள சரஸ்வதி மடமாகும். இச்சிறந்த கைங்கரியத்தை நடத்தியவர்கள் தொண்டைமானாற்றுச் சைவாங்கிலகலாசாலை ஆசிரியர்களும் அவ்வூர் வாசிகளுமே யாவர். இத்தொண்டைச் செவ்வனே நடத்துவதற்குப் பெரு மூக்கமெடுத்தவர் ஸ்ரீ க. தர்மலிங்கம் (B. S C) அவர்களாவர். அவருடைய சைவாபிமானமும் ஈசுரபத்தியும் பாராட்டத்தக்கன.

கடித

## ஸத்தியாக்கிரஹிகள் விடுதலை

தந்தையின் நோய்காரணமாக ஸடாரா டிஸ்திரிக்காங்கிரஸ் நிருவாக்சபைத்தலைவர் ஸ்ரீவேங்கடராவ் பாவாரைப்பம்பாய் அரசாங்கம் நிபந்தனையின்றி விடுதலை செய்திருக்கின்றனர்.

0 0 0

தண்டனைக்காலம் தீர்ந்துவிட்டதால் எரவாடாச் சிறையிலிருந்து 8 ராஜீயக்கைதிகள் சென்ற திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

## காந்திஜீயின் 73-வது பிறந்த தினம்

காந்திஜீயின் 73-வது பிறந்த தினத்தன்று அவருக்கு 73 லக்ஷம் யார் நூலைச் சன்மானமாகஅளிக்க இங்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்வகையில் நாகபுரியிலுள்ள காங்கிரஸ்காரர்கள் பெரிதும் முயன்று வருகின்றனராம்.

## காந்திஜியும் ஜின்னவும் தினம் சிட்டாடினல்—காங்கிரஸ்—லீக் வேற்றுமை அகலும்

டக்டர். வி. கே. ஆர். வி. ராவின் கருத்து

ஆமதாபாத் செப் 4

நண்பர்கள் தேசிய லீக்கின் கிளைப்பைத் திறந்து வைக்கும்போது டக்டர். வி. கே. ஆர். வி. ராவ் பின்வருமாறு கூறினர்:—

"மகாத்மா காந்தியும் ஜனுப் ஜின்னவும் தினந்தோறும் மாலையில் ஒரு கிளப் அறையிற் சேர்ந்து சிட்டாடினல் காங்கிரஸ்-லீக் வேற்றுமைகள் விரைவாக அகன்றுவிடும். நட்பையும் சகோதரத்துவத்தையும் பெருக்குவதற்குச் சிறந்த வழி விளையாடுமிடங்களை ஏற்படுத்தவதுதான். நாள்தோறும் அங்கு கூடுவதால் ஒருவரை யொருவர் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. அங்ஙனம் ஒருவரை யொருவர் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. அங்ஙனம் ஒருவரையொருவர் பரஸ்பரம் அறிவதால் மரியாதை வளர்ந்து அரசியல் வேற்றுமைகளையும், கட்சிச் சண்டைகளையும் ஒழித்து விடுகிறது" என்று கூறினர்.

## வின்ஸர் படமாளிகை

சென்ற திங்கட்கிழமை தொடக்கம் இப்படமாளிகையில், M. K. தியாகராஜ பாகவதர், சித்தூர் V. நாகையா, M. G. ராமசந்தர், K. மஹாதேவையர், P. கண்ணாம்பா T. V. குமுதினி, N. S. கிருஷ்ணன், T A. மதுரம் ஆதியோர் நடித்த "அசோககுமார்" என்னும் அரிய தமிழ்ப்பேசும்படம் காட்டப்பெற்று வருகிறது. புத்தரின் சிஷ்யர்களுள் ஒருவராகிய உபகுப்தரின் அருள்பெற்றுத் தன் மகனிழந்த கண்ணையும் தான் இழந்த அகக்கண்ணையும் ஒருங்கேயடைந்து புத்த சமயத்தைப்பரப்பிய அசோக சக்கரவர்த்தியோடு சம்பந்தப்பட்ட கதையே இப்படத்தின் கதையாகும். ஆகவே,கதையளவில்,இதுபுத்த சமயத்தார் பெருந் தொகையாக உள்ள இலங்கைக்குப் பெரிதும் விருப்பத்தைத் தரத்தக்கதொன்றாகும். இதிற் காட்டப்படும் பிக்கு புத்தர் உருவச்சிலை முதலியவை புத்த பக்தியை விளக்கத்தக்கனவாகும். அசோக்குமாரக நடிக்கும் M. K. தியாகராஜ பாகவதர் வழக்கம் போல உணர்ச்சி ததும்ப நடித்திருப்பதோடு இனிய கீதங்களையும் பாடிப் படத்தைச் சோபிக்கச் செய்கிருர். இப்படத்தில அசோக்குமாரனைத் தன ஆசைவலையிற் சிக்க வைக்க முயலும் சிறுதன்னையாக நடிக்கும் P. கண்ணாம்பாவின் நடிப்புத்திறம் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. வேற்று மொழியைச் சேர்ந்த பெண்ணாக இருந்தும் இவர் தமிழ்ப்பேசுவதும் பாடுவதும் நடிப்பதும எவர்பாராட்டுக்கு முரியவாகும். அசோக்குமாரின மனைவியாக நடிக்கும் T. V. குமுதினியும் உருக்கத்தை விளக்கத்தக்கமுறையில் நன்றாகவே நடித்திருக்கிருர். இவருக்கு இப்படத்தில் அதிக பாட்டுக்கள் கொடுக்கப்படாத போதிலும் இவர்பாடும் இரண்டொரு பாட்டுக்கள் இனிமையாகவே இருக்கின்றன. இனனும் இரண்டொரு சந்தர்ப்பத்தில் இவருக்குப் பாட்டுக்கள் கொடுத்திருக்கலாமென்பது படாவிகர்களது கருத்து. காமமும் அதனுல் சேர்ந்த சூழ்ச்சியும் அதனுல் கள்ளங்கபடமற்ற இளவரசனும் மனைவியும் தமுபவிக்கும் கஷ்டங்களும், கண்ணிழந்ததும், அருமைக் குழந்தையை இழந்ததும் ஆகிய உருக்கமும் இரக்கமும் விளைக்கும் பகுதிகளையுடைய இப்படத்தில N. S. கிருஷ்ணன், T. A. மதுரம் ஆகிய ஹாஸ்யச் சோடி நடிக்கும் நகைச்சுவை விளக்கும் பகுதி இடையிடையே இன்பச் சுவையை விளைக்கின்றது. ஏனைய நடிகரும் தத்தம் திறமையைக் காட்டியிருக்கின்றனர். அசோக சக்கரவர்த்தியாக நடிப்பவரும் உணர்ச்சியோடேயே நடித்திருக்கின்றனர். ஆடவரும் மகளிரும் பார்த்து மகிழத்தக்க கணியம் வாய்ந்த சிறந்த படங்களுள் இதுவுமொன்று என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கையின் பலவை, ஆசையின் மோசம், உலக நிலையாமை, ஜீவகாருண்யம் முதலிய உயர்ந்த இலக்ஷியங்களைச் சுட்டும் இப்படம் எவராலும் பார்த்து மகிழத்தக்கதேயாம்.

## கொட்டடி நமசிவாய வித்தியாசாலைப் பெற்ருேர் தினக் கொண்டாட்டம்

சென்ற திங்கட்கிழமையன்று கொட்டடி நமசிவாய வித்தியாசாலைப் பெற்ருேர் தினக் கொண்டாட்டம் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் மாலை 8½ மணியளவில் வடபெரும்பாக வித்தியாதரிசி திரு. A. J. R. வேதவனம் அவர்கள் தலைமையில் மிக்க சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளான ஆடவரும மகளிரும சமுகமளித்திருந்தனர். தலைவர் தமது முன்னுரையில பள்ளிக்கூட முகாமைக்காரரையும் தலைமையாசிரியரையும் பாராட்டிப் பெற்றோரை அவர்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன் பின், தலைமையாசிரியர் திரு. K. குமாரசுவாமி யவர்கள் சிறப்பாக எழுதப்பெற்ற தமது அறிக்கையை வாசித்தார். அதனபின வித்தியாசாலை மாணவ மாணவிகளால், பாட்டு, நடித்தல், மனனப்பிரசங்கம், கும்மி, அபிநயப்பா, சுகாதாரநடித்தல்,ஆங்கிலப்பா, புராணபடனம, சுகாதாரப்பாட்டு, வள்ளியம்மை திருமணத்தின் ஒரு பகுதி நடித்தல், இராதாக்கிருஷ்ண நடனம், கோலாட்டம் முதலியன சிறப்பாக நடத்தப் பெற்றன. சிறப்பாக இராதா கிருஷ்ணநடனம் முதலியன குறிப்பிடத் தக்கன. இவற்றைத் திறம்படப் பயிற்றிய திரு. சரவண முத்துவுக்குத் தலைமையாசிரியர் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார். பாடசாலைச் சுகாதார உத்தியோகஸ்தர் டக்டர் K. கனகரத்தினம் அவர்களால சுகாதாரம்பற்றிச் சிறந்த ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. வித்தியாசாலைச் சுகாதார அனாதசாலை அநாதபுரத்திற் கடமை யாற்றும் டக்டர் கெலார்ட் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தலைவர் பின்னுரையோடும் நன்றியுரையோடும் தேநீர் விருந்தோடும் கூட்டம் ஏறக்குறைய 10 மணியளவிலிடிநிதுநிறைவேறியது.

அடுத்தநாளிரவு மேற்படி வித்தியாசாலை மாணவர்களால் 'கிருஷ்ண லீலா' என்னும் நாடகம் சிறப்பாக நடித்துக் காட்டப்பட்டது.

## ஆன்மவுணர்ச்சி

1-ம் பக்கத் தொடர்ச்சி

குபதேசியாயுள்ள தலைவனையும் உணர்ந்து,

"இகபரமு முயிர்க்குயிரை யனைத்தையுந்தற் றவருறவை யெந்தாயைஞ்

சுகபரிபூரணமான சிவமேகசொத்தைத் தரியவாழ்வை

அகமகிழவருந் தேனை முக்கனியைக்கற்கண்டை யயிர்வதரடி

மொகுமொகெனவிருக்கிழிநீர் முத்திரைப்பக் கமலக்கண் முகிழ்[த்து நிற்பமே

எனச் சித்தாந்தச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தவாறு இம்மை மறுமை இரண்டிலும் உயிர்க்குயிராக விளங்கும் பேரிறைவனை சீருனை நாடி அவர்பால் அன்பு பூண்டு அவனை வாழ்த்தி வணங்கப் பேரின்பப் பெருவாழ்வுறுவோமாக-சிவநேசன்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இலக்கம். 7661

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் வணிழக்கு

1. நாகலிங்கப்பத்தர் துரையப்பா பத்தரும பெண் (2) கமலம்மாவும் வழக்காளிகள் இறந்து போனுர்.

எதிராக வணக்கு சுப்பிரமணியம், தம்பி ஐயா-எதிரி தனேவி, வட்டுக்கோட்டை 1. சுப்பிரமணியம் தம்பிஐயா மைம் பெண் மக்கயற்கரசியும், 2 சுப்பிரமணியம் தம்பிஐயா மகன் பாலசுப்பிரமணியம் பதில். எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் மேற்குறித்த வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விவரிக்கப்படும் இரு தண்டுக்காணிகள் 1941 ம் ஞு ஐப்பசி மீ 4 உ சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நிலஅ பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். தீர்வைத்தொகை ரூபா 3000.

காணிகளின் விபரம்

1 வண்கிழக்கு இறை இலுப்பிக்கன் ஒடாவி வயலும் தரையும் பரவில் இலா. 3¾ லும் கிணறும் செய்யிர்களும் பனைகளும், எல்லை கிழக்கு விசயநாதர் செல்லத்துரையின் ஆதனம், வடக்கு ஒழுங்கையும் ஆறுமுகம் ஓராசேகர்த்தின் ஆதனமும், மேற்கு ரோட்டு, தெற்கு சுப்பிரமணியம் கந்தையாவின் ஆதனம் இது அடங்கலும்.

2 சுல்லூர் இறை தனிப்புலி ஆராய்சியைவருளிற்றும் கிழக்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் கிழக் கெல்லைக் காணியின் வடபக்கமாய் போக்குவரவு செய்யும் வழிப் பாதையும் எல்லை கிழக்கு கந்தையா பெண் கல்லம்மாவின் ஆதனம், வடக்கு ரோட்டு, மேற்கு சபாபதி ஆறுமுகத்தின் ஆதனம், தெற்கு பொன்னையா பெண் சுந்தரத்தின் ஆதனம். இது அடங்கலில் சொரியலாய் குளி 5 க்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

K. பொன்னப்பா

வெத்தில் மேஸ்தரும் கொமிஷனரும்

இணுவில் 10- 9- 41

Mis 700 11- 9- 41


## "காயகல்ப" அனுகூல சிகிச்சை

காயசித்தி, தத்துவக்குறைவு, சலரோகம், வாதம், சிறுநீர்வாதம், வலி, தோற்புரை வியாதிகள், குட்டம், ஆதியாம் நோய்களுக்கு அநுகூலமான சிகிச்சை.

மேகராசா

சலரோகம், நீரழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரழிவு ஆகிய எத்தநிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து, பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 4-00.

சுண்டிக்குளித்தபாறகந்தோர்த்தலைவரின் வருமாறு எழுதுகிறார்:- நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன். வன் சுலம் சுத்தமாகி விட்டது. இக்கச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்,

இங்ஙனம்,

P. நடராஜா.

பின்வருவோரைக் கலந்தாலோசியுங்கள்:—

டக்டர் K. T. மங்களம்

R. I. M. P.

(சென்னை)

M. S. V. S. அக்கத்தவர்,

கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

Q 82 7-8—6.11.41

கலியிலும் தெய்வத் திருவினையாடல் காண வேண்டும் பக்தர்கள்

## பழநி ஆண்டவரைப் பிரார்த்தியுங்கள்.

உங்கள் பக்திக்கேற்பப் பழநி ஆண்டவர் அருள்பாலிப்பார். படிப்பு, உத்தியோக உயர்வு, நல் மணம் யாவும் சித்திக்கும். நாம நக்ஷத்திரத்தால் மாதம் கார்த்திகை தோறும் அர்ச்சனை செய்து 1 வருடம் வரை தவறாது தபால் மூலம் பிரசாதம் அனுப்ப வருட சந்தா ரூபா 6—75

P. நடராஜபண்டாரம்

மலைக்கோவில் அயன்பிரான் பழநி

Q 93 A 25-8.41—24.11.41 (வி)

## விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சிந்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவநிலை முதலிய கணித வகைகளும், மகா தெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், கால சக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை

போக்கத்தை,

கைதடி வடக்கு, கைதடி.

Y 67 20-7.41—19-7.42


## கொழும்பு விவேகானந்தசபை

பரீக்ஷைப்பேற்று விபரத்தில் திருத்தம்

எங்களால் வெளிப்படுத்தப்பட்ட சமயபாடப்பரீக்ஷைப் பேற்றுவிபரத்தில் முதலாம்பக்கத்தில் கீழ்ப்பிரிவு ஆங்கிலவித்தியாசாலை 1-ம்பரிசு ஞர். வே. பாலசிங்கம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் அவர் தமிழ் வித்தியாசாலை மாணவராகையால் கீழ்ப்பிரிவு ஆங்கில வித்தியாசாலை என்பதன் கீழ் உள்ள பெயர்களை நீக்கி 1-ம் பரிசு கா. பரமேஸ்வரி சுன்னாகம் இராமநாத கல்லூரி, 2-ம் பரிசு க. தில்லையம்பலம் யல்லாகம் ஆங்கில வித்தியாசாலை எனத் திருத்திக் கொள்ளுமாறு பரிசைப் பேற்ற விபசுமுடைய பெரியோர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

க. சின்னத்தம்பி

பரீக்ஷைக்காரியதரிசி

## உபசாரணை வாழ்த்து

8-9-41 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர்களுள் ஒருவராகிய திருவாளர் த. பராசசிங்கம் B. A (Lond) அவர்களுக்கும் அவர்களது பத்தினியாருக்கும் திருமணம் முதலிய வரவேற்பும் உபசாரணையும் நடைபெற்றன.

ஸ்ரீமான். S. நடேசபிள்ளை B. A. B. L., F. R. E. S., M. S. C. அவர்கள் தலைமைவகித்தார்கள். மணமக்கள் இருவருக்கும் மாலைசூட்டப்பெற்றதும் தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. ஆசிரியர்கள் திரு. N. சுப்பையா ராசா அவர்கள் ஆங்கிலத்திலும் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் தமிழிலும் தம்பதிகளைப் பாராட்டிப் பேசினர். தமிழில் வாழ்த்துப்பாவும் பாடிக் கொடுக்கப் பெற்றது.

கல்லூரிச்சாரணர் படையார் ஆங்கிலத்தில் உபசாரப்பத்திரம் வாசித்தளித்தனர். தலைவர் அவர்களும் தம்பதிகள் இருவருடைய சிறப்பியல்களையும் பாராட்டிப்பேசி வாழ்த்தியதும் தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவேய்தியது.

உடன் சிற்றுண்டி எல்லோர்க்கும் வழங்கப்பெற்றது. 5 மணியளவில் பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர்கள் அதிபர்கள் சாரணர் படையினர்களுடன் தம்பதிகளை வைத்துப் புகைப்படம் எடுக்கப்பெற்றது. தம்பதிகள் என்றும் இன்பமாய் வாழ இறைவன் அருள்புரிக.

## ஆஸ்பத்திரிகளில் புதிய வசதிகள்

கொழும்பு, செப் 7—

இலங்கையில் உள்ள சகல ஆஸ்பத்திரிகளையும் சகல நவீன வசதிகளுடன் மாற்றியமைக்கவேண்டுமென்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. இது சம்பந்தமான ஓர் திட்டம், பெரிய ஆஸ்பத்திரி ஆலோசனைச் சபையாரால் பரிசிலனை செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது. ஜெனரல் ஆஸ்பத்திரியை ஒரு முன்மாதிரியாக வைத்துக்கொண்டு இத்தீவில் உள்ள மற்ற ஆஸ்பத்திரிகளையும் அபிவிருத்திசெய்யவேண்டும் என்ற ஆலோசனை பிற்பற்றப்படலாம்.

## இலங்கை - இந்தியச் சம்பாஷணை.

### இலங்கைக் கோஷ்டிக்கு மற்றொரு ஆலோசகர்.

இலங்கை - இந்திய சமாசப்பேச்சுக்கள் அரசாங்கக் காரியாலயத்திற் சென்ற திங்கட்கிழமை காலை 10½ மணிக்குத் தொடர்ந்து நடைபெற்றன. இலங்கைத் அரசுக் கோஷ்டியிற் காணிக் கொமிஷனர் திரு. வி. எல். விக்கிரமசிங்காவும் உத்தியோகப் பற்றுள்ள மற்றொரு ஆலோசகராகச் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கின்றனர்.

மகாநாடு பகல் 12-45க்குப் பின் போடப்பட்டது. அப்பொழுது கீழ்க்காணும் அறிக்கை விடப்பட்டது:-

"அநுக் கோஷ்டிகள் சந்தித்தன. இந்தியர் வாக்குரிமை பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. நாளைக்காலை 10-30 மணிக்குப் பேச்சுக்கள் மீளவும் தொடங்கும்."

விவசாய மந்திரி மிஸ்டர். டி. எஸ். சேனநாயகா திங்கட்கிழமை பேச்சில் பிரதிநிதிகளுக்குத் தமது வாசஸ்தலத்தில் ஒரு விருந்தளித்தார்.

வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

# புடவைகள்

இப்போது யாழ்ப்பாணத்திலொவ்வொருவீட்டிலும்
பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்துணிகள் |
| சேலைகள் | ரசூர்கள் |
| சாரங்கள் | 'வேஷ்ட்' துணிகள் |
| கம்பாய்கள் | வீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குலோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | யன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறைக்கப்பட்டது.)

Mis 127. 11-10-40—

# புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

## குடி இயல் நூல்

இலங்கை
வித்தியாபகுதியாரால் அங்கிகரிக்கப் பெற்றவை.
(அங்கிகார இலக்கம், 21 A & B / 41 திகதி 3-7 41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

# குயின்பிரூண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

( Y. 21. 11-8-40—10-8-41.) வி

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரை உளது)
அதிகாரம் பெற்ற முலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
சேமிப்பாயும், சம்பாதிப்பத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)

# அடைவு நகை விற்பனவு. விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ச பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்.மேற்கு மு. சோம. அ. சோமசுந்தரஞ் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்,

| இல. | உ | ரூ | ச | ஊர் பெயர் நகையின் விபரம் |
|---|---|---|---|---|
| | | | | 1939 செப்டம்பர்மீ |
| 1724 | 5 | 9 | | கன்னாதிட்டி ஆ. கல்லுசாமி வெள்ளைக்கல் தோடுசோடி 1 |
| 1731 | 5 | 30 | | கோண்டாவில் மேற்கு க. தம்பித்துரை இமி கல் டிம்பியுடன் சங்கிலி அட்டியல் 1 |
| 1802 | 11 | 13 | | கொக்குவில் மேற்கு அ. சின்னத்துரை முருக்குப் பிள்ளைக் காப்பு சோடி 1 |
| 1815 | 12 | 15 | | நல்லூர் வ. தில்லையம்பலம் இமி கல் பதக்கம் 1 |
| | | | | நவம்பர் மாதம் |
| 2541 | 14 | 14 | | அராலி கிழக்கு பொ. வல்லிபுரம் இமி வெள்ளைக்கல் மோதிரம் 1 |
| 2547 | 16 | 16 | | சோனகதெரு பொ. தருமராசா மழுக்கன் சிகப்புக் கல் காதோலை சோடி 1 |
| 2693 | 27 | 6 | | நல்லூர் அ. செல்லையா கைச்சங்கிலி 1 |
| 2708 | 29 | 12 | | நல்லூர் க. விஸ்வலிங்கம் இமி வெள்ளைக்கல் சிறுதோடு சோடி 1 |
| | | | | டிசம்பர் மாதம் |
| 2781 | 4 | 35 | | வண்கிழக்கு வி. நாகலிங்கம் இமி. கல் மோதிரம் 2 |
| 2865 | 9 | 35 | | இணுவில் ச. கதிர்காமத் தம்பி நெல்லுப்பிள்ளைக்காப்பு சோ 1 |
| 3100 | 27 | 10 | 50 | வண்மேற்கு வே. வி. வேலுப்பிள்ளை சிமிக்கிவாளி சோடி 1ம் ஷை குடம் 1 |
| | | | | 1940 ஜனவரி மாதம் |
| 3282 | 9 | 8 | 50 | ஆஸ்பத்திரி றோட் R. M. G. ஜோகானில் இமி நீலக்கல் மோதிரம் 1 |
| | | | | பிப்ரவரி மாதம் |
| 3659 | 4 | 82 | | புத்தூர் மேற்கு சின்னத்தம்பி முத்துச்சாமி சாதா பிலிக்காப்பு சோடி 1 |
| 3673 | 5 | 14 | | அராலி கிழக்கு ஈ. துரைரெத்தினம் விலாசம் போட்ட ஆமதன் மோதிரம் 1 |
| 3736 | 9 | 95 | | சோனகதெரு மு. முகம்மது அப்துல்காதர் இமி வெள்ளைக்கல் பெண்டனுடன் சங்கிலி அட்டியல் 1ம் அச்சுக்கம்பி வளையல் சோடி 1 |
| 3827 | 15 | 7 | | நீர்வேலி வடக்கு இ. கனகரத்தினம் தாலி 1 |
| 3942 | 24 | 23 | | இளவாலை ஞா. மரியாபரணம் இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1ம் இமி கல் காதுக்குச்சி சோடி 1 |
| | | | | மார்ச்சு மாதம் |
| 4025 | 2 | 6 | | துணைவி W. A. லோவல் இமி கல்மோதிரம் 1 |
| 4040 | 2 | 7 | | ஆனைக்கோட்டை இ. சின்னையா தாலி 1 |
| 4234 | 19 | 85 | | நவாலி தெற்கு அ. பிரூஞ்சிஸ் இமி கல் நெல்லுக்காப்பு சோடி 1ம் பிள்ளைக்காப்பு சோடி 1ம் கல் காதுக்குச்சி சோடி 1 |
| 4399 | 31 | 7 | | தட்டாதெரு சி. முத்துக்குமாரு வெள்ளைக்கல் பொட்டு 1 |
| | | | | ஏப்ரல் மாதம் |
| 4587 | 11 | 10 | | வண்மேற்கு க. பரமசிவம் இமி வெள்ளைக்கல் கடுக்கன் சோடி 1 |
| 4824 | 29 | 60 | | ஆவரங்கால் கா. தாமோதரம்பிள்ளை சாதா மல்லிகை மூட்டுக் காப்பு சோடி 1 |

விற்பனவு நிகழும் விஷு வருஷம் புரட்டாதி மாதம் 7-ம் தேதி (23-9.41) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் ஏடுபட்ட நகை மிறைக்கலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை
வெந்திஸ் மேஸ்தர்

(Mis 98, 8 & 11-9.41)

சி. எம். சாமி
# மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அனேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஒளடதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும் ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். சேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அர்கியாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கோழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-430-3.41

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942)
# பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்
மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார் பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதி யொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம் 20.8-40
மனேஜர்.

# திருச்சிரேடியோ நிகழ்ச்சி
(மீ 396)

## வெள்ளி செப்டம்பர் 12

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 தராக்-இ-ஷரீப் 8.00 இஸ்லாமிய துதிகள் (இசைத்தட்டு) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஸ்ரீமதி. எம். ஏ. சாரதாம்பாள் வீணை பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு

1-00 பிடித்த பாட்டுகள் (இசைத்தட்டு) 1-15 லிலா லிமாயி (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி. எம். ஏ. சாரதாம்பாள் வீணை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 வாத்தியகீதம் 5-15 வி. வி. கோவிந்தஸாமிப்பிள்ளை நாகஸ்வரம் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 டி. வி. நமசிவாயம் பாட்டு 6-30 கிராம நிகழ்ச்சிகள் 7-00 இலக்கிய வாசகம் 7-15 வாழ்க்கைப் பலகணி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 ஸி. வி கோவிந்தஸாமிப்பிள்ளை நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் 8-45 டி. வி. நமசிவாயம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்புமுடிவு

## சனி செப்டம்பர் 13

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 பாகவதர் விளக்கம் 8.00 பஜனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 எம். எஸ். நடராஜ பாகவதர் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 படப்பாட்டுகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எம். எஸ். நடராஜ பாகவதர் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 லால்குடி நீலமேகம் பிள்ளை வயலின் 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 மதராஸில் உள்ளபடி 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 லால்குடி நீலமேகம் பிள்ளை வயலின் 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 செய்திச் சுருக்கம் 7-15 ப்ருந்தாவனம் 7 30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7 50 மதராஸில் உள்ளபடி 9-15 இடைவேளை (இசைத்தட்டு) 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

## ஞாயிறு செப்டம்பர் 14

காலை 7-30 கீதாரம்பம்(இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 தேவாரதனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 சாத்தியக்குடி ஸ்ரீமதி ஆர். மீனாக்ஷி சுந்தரம் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 பஜன் (இசைத்தட்டு) 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 வித்துவத் சங்கீதம் (இசைத்தட்டு) 2-00 தமிழில் செய்திகள் 2-05 சாத்தியகுடி ஸ்ரீமதி. ஆர். மீனாக்ஷி சுந்தரம் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 வாத்தியகீதம் 5-15 வடக்குசேரி எஸ். எஸ் மணிபாகவதர் பாட்டு 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 எம். கே. கல்யாண கிருஷ்ண பாகவதர் வீணை 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 எம். எஸ். சுப்புலக்ஷ்மி (இசைத்தட்டு) 7-15 இலக்கியமும் சம்பிரதாயம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 வடக்கஞ்சேரி எஸ். என். மணிபாகவதர் பாட்டு 8 30 எங்கள் தபால் பெட்டி 8-45 எம். கே. கல்யாண கிருஷ்ண பாகவதர் வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

## திங்கள் செப்டம்பர் 15

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 பி. எல். ஜி. எம் சிவசுப்பிரமண்ய பிள்ளை நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படப்பாட்டுகள் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 கதம்ப இசை (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி ஜே. டி. நாயகி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 பி. எல். ஜி. எம் சிவசுப்ரமண்ய பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி ஜே. டி. நாயகி பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 கே. எல். சைகல் (இசைத்தட்டு) 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 சித்தூர் சுப்ரமண்ய பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10-00 ஒலிபரப்பு முடிவு.

# வங்கத்தில் அரசினர் நெருக்கடி?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கிறது. ராஜினாமாவைப் பற்றி நகரிற் பிரமாதமாக வதந்தி உலவுகிறதென்று பத்திரிகைப் பிரதிநிதிகள் அவரிடம் தெரிவித்தபொழுது அவர் அவற்றை மறுக்கவோ அல்லது ஊர்ஜிதம் செய்யவோ பிரியப்படவில்லை.

ராஜிநாமாப்பற்றி விவாதம்

ராஜினாமாவைப் பற்றி "யுனைடெட் பிரஸ்" நிருபர் மௌல்வி ஹக்கைக் கேட்டபொழுது அவர் தாம் அதைப்பற்றிக் கவர்னருடன் விவாதித்ததை மறுக்கவில்லை. எனினும் அதற்குள் அவர் எவ்வித அறிக்கையும் வெளியிடத் தயாராக இல்லை.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணி அவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல | தி | ரூ | ச | பெயர் ஊர் நகையின் விபரம் |
|---|---|---|---|---|
| | | | | 1939 டிசம்பர் |
| N 9415 | 7 | 10 | | மீ. சேகுமுகம்மது முஸ்லிம்தெரு குண்டுடன் அரைப்பவுண் 1 |
| 9569 | 17 | 14 | | தொ. மடுத்தின் மண்டைதீவு கல்த்தோடு 2 |
| 9750 | 28 | 10 | | சி. அருளப்பு மண்கும்பான் குப்பிக் கடுக்கன்2 காதுப்பூ 2 |
| | | | | 1940 ஜனுவரி |
| O 18 | 1 | 6 | | க. யாக்கோப்பு அல்லைப்பிட்டி மோதிரம் 1 |
| 164 | 9 | 75 | | சி. கணபதிபிள்ளை நவாலி முரிச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 347 | 19 | 12 | | சி. கதிரேசன் கோப்பாய்தெற்கு கல்த்தோடு 2 |
| 441 | 24 | 95 | 03 | ச. சிவசம்பு இணுவில் குண்டுச்சங்கிலி 1 |
| 558 | 29 | 70 | 03 | மு அ.செயினுமுகம்மது முஸ்லிம்தெருபொன் அறுக்குத்து20 |
| 569 | 31 | 12 | 03 | கா. அப்துல்கமீது ஷை பொன் அறுக்குத்து5 |
| | | | | 1949 பெப்ருவரி |
| 641 | 3 | 82 | 03 | கா. அப்துல்கமீது முஸ்லிம்தெரு கம்பிப்பூரானட்டியல் 1 |
| 642 | 3 | 10 | 03 | ஷை ஷை பொன் உருப்படி7 சிமிக்கிவாளி 1 கூடு 1 |
| 741 | 8 | 12 | | P. அத்துல்காதிறு ஷை கல்த்தோடு 2 |
| 845 | 14 | 17 | | க. கார்த்திகேசு நவாலி தெற்கு பொன் குப்பிக்கடுக்கன் 2 |
| 873 | 15 | 8 | | சி. சடையர் நெடுந்தீவு குவளைக் கடுக்கன் 2 தி. இ. |
| 990 | 23 | 12 | | வ. கார்த்திகேசு மண்டைதீவு பொன் குப்பிக்கடுக்கன் 2 |
| 1046 | 27 | 95 | 03 | J லட்சுமி நாராயணன் கடையடி மோதிரம் 1 இலைத்தூக்கணம் 2 தெறி 4 |
| | | | | 1940 மார்ச்சு |
| 1088 | 1 | 6 | | சி. முருகர் நெடுந்தீவு சிமிக்கிவாளி 2 |
| 1126 | 3 | 8 | | இ. நாகரெதி புங்குடுதீவு கல்த்தோடு 2 |
| 1293 | 13 | 7 | | மு. நடராசா மானிப்பாய் கட்டைக்கம்பி ஒலை 2 |
| 1321 | 15 | 18 | 03 | மு. பொன்னுத்துரை வேலணை கல்த்தோடு 2 |
| 1385 | 19 | 12 | | க. கந்தையா பூனகரி பொன் குப்பிக் கடுக்கன் 2 |
| 1398 | 19 | 8 | | க. வை. நடேசன் ஆனைக்கோட்டை கல் பதக்கம் 1 டிம்பி இல்லை. |
| 1434 | 21 | 950 | 03 | B. பிரகலாதன் கடையடி இரண்டுபட்டு அரைஞாண்கொ1 |
| 1462 | 22 | 38 | 03 | அ. கச்சுமுகம்மது முஸ்லிம்தெரு மணிக்கோர்வை 2 |
| 1568 | 27 | 16 | | மு. சாகுல்கமீது ஷை பூசாந்திரம் 1 |
| 1579 | 28 | 35 | 03 | பா. நிக்கிலாசு நாவாந்துறை கல்த்தோடு 4 |
| | | | | 1940 ஏப்ரில் |
| 1667 | 2 | 6 | | அ. சாகுல்கமீது பெரியதெரு பொன்காப்பு 2 குச்சி 2 |
| 1718 | 5 | 27 | | வ. சின்னப்பு நீர்வேலி வடக்கு பொன் குப்பிக்கடுக்கன் 2 பின்கோக்கி 1 |
| 1769 | 8 | 40 | 03 | S. அம்பலவாணர் ஐயனார்கோயிலடி வேலை செய்த பவுனுடன் குண்டுச்சங்கிலி1 எஸ். இ. |
| 1831 | 11 | 180 | 03 | இ. மு. அருணாசலம் சித்தங்கேணி பதக்கத்துடன் கெட்டிப் பூரானட்டியல் 1 |
| 1892 | 15 | 28 | 03 | ம. ஞானமுத்து நாவாந்துறை கல்மோதிரம் 1 கல்த்தோடு 2 |
| 1965 | 19 | 6 | 03 | வ. கார்த்திகேசு மண்டைதீவு பொன் குப்பிக்கடுக்கன் 2 |
| 1993 | 21 | 6 | 03 | ம. முத்துராசா முஸ்லிம்தெரு பொன் அச்சரக்கூடு 1 மூக்குத்தி 1 |
| 2000 | 22 | 17 | | வேலன் வல்லி கரையூர் கல்த்தோடு 2 |
| 2058 | 25 | 30 | | S. A. கனகசபை தாவடி புளூச்சு 1 |
| 2117 | 29 | 100 | 03 | S கச்சு முகம்மது முஸ்லிம்தெரு சவடி முகப்பு 1 |
| 2122 | 29 | 20 | | K விசுவலிங்கம் புங்குடுதீவு கல்த்தோடு 2 |
| 2151 | 30 | 200 | 03 | M. பக்கீர்மீராலெவ்வை முஸ்லிம்தெரு அரக்குடன்பொன் கடயம் 2 |
| 2152 | 30 | 30 | 03 | வா. வரிசை முகம்மது ஷை பொன்சவடி முகப்பு 1 |
| | | | | 1940 மேமீ |
| 2172 | 1 | 75 | | M. M. சாகுல்கமீது முஸ்லிம்தெரு பழுதுபட்ட பொன் சவடி 1 |
| 2249 | 6 | 70 | 03 | S. S. அப்துல்காதிறு ஷை கிளிக்கால் அட்டியல் 1 |
| 2286 | 8 | 13 | | ஆ. செல்லையா வேலணை கல்த்தோடு 2 |
| 2338 | 11 | 60 | 03 | க. ஆறுமுகம் கடையடி பதக்கத்துடன் மு அட்டியல் 1 |
| 2363 | 13 | 45 | | N உசன்தம்பி புதுப்பள்ளி றோட் காறுபட்டு மணிக்கோர்1 |
| 2383 | 14 | 9 | | செ. சவுரிமுத்து மாதகல் தனிப்பதக்கம் 1 |
| 2396 | 15 | 32 | | ம தினகரிப்பிள்ளை புத்தூர் கல்த்தோடு 2 அச்சரக்கூடு 1 |
| 2503 | 20 | 15 | | M. சாகுல்கமீது முஸ்லிம்தெரு பொன்மணிக்கோர்வை 1 |
| 2532 | 22 | 18 | 03 | K. M. அப்துல்காதிறு ஷை பொன்மணிக்கோர்வை1 |
| 2560 | 23 | 10 | 03 | K. குமரசிங்கி பொலிஸ்லயின் நாக்கணத்துடன் கல்குச்சி2 |
| 2589 | 25 | 15 | | இ. நடராசா ஆனைக்கோட்டை கல்த்தோடு 2 |
| 2651 | 29 | 7 | | ப. மிஸ்கின் சாகிபு முஸ்லிம்தெரு கல்குச்சி 2 |

விற்பனவு நிகழும் விஷு வருஷம் புரட்டாதி மாதம் 26ம் தேதி (12.10.41) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஏடுபட்ட நகை மிறைக்கலாக மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை
வெந்திஸ்மேஸ்தர்

(Mis 99. 11 & 15.9.41)

# பாரதி திருநாள்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

பாரதியாரின் தோத்திரப் பாக்களைப் படிக்கும் ஒவ்வொருவரும் பக்திரசம் பருகினோர் ஆவர். ஒருகால் அப்பாக்களை ஓதின் கருங்கல் மனமும் கசிந்துருகும். அவற்றுட் சில:

முருகன்:-

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே
வீரத் திருவிழிப் பார்வையும்-வெற்றி
வேலு மயிலுமென் முன்னின்றே-எந்த
நேரத்திலு மெனைக் காக்குமே
சீவனுங் குரு வெற்பிலே-வந்து
நின்ற திருப்புகழ் பாடுவோம்.

கண்ணன்:-

பாம்புத் தலைமேலே-நடனஞ் செயும்
பாதத்தினைப் புகழ்வோம்
மாம்பழ வாயினிலே குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்.

வாணி:-

தாமரைப் பூவினிலே-சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே- கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம். (திப்

இவ்வினித்த பைந்தமிழ்ப் பாக்களைப் பாரதியார் அவர்கள் சென்னைக் கடற்கரையில், சாந்தியமான சாயங்கால வேளையில் உலகனைத்தையும் வயப்படுத்தி நீலக்கடலையும் பாற் கடலாக்கும் நிலவொளியில் தனி அமர்ந்து, தன்னை மறந்து பாடுவதைக்கேட்டோரே அவற்றின் சுவையை அறிந்தோராவர்.

தாயுமானவர் பட்டினத்தடிகள் முதலிய பழந்தமிழ்ப் பெருமக்கள் செய்த வேதாந்த நூல்கள் பல இருக்கின்றன. அவைகள் கூறும் உண்மைப் பொருள்களை ஓர்ந்து உணருந்தகைமையர் மிகச் சிலரே. அவருள்ளும் அச்சாத்திரங்களைப் பிறர்க்குத் தெளிவாக எடுத்துரைக்கும் நீர்மையர் மிக மிகச் சிலரே. அன்றியும் அந்நூல்கள் பெரும்பாலும் மனித வாழ்க்கையின் நிலையாமையையும், அவர்களுக்கு நேரிடும் பிணி மூப்பு முதலிய கேடுகளையும் பற்றி முறையிடுவதால் மக்களுக்கு உலக வாழ்வில் ஊக்கம் குன்றி வெறுப்பு உண்டாகின்றது. ஆனால்,

"செஞ்சிற கவலை தீரும் பயிராக்கி
அஞ்சியுயிர் வாழ்தல் அறியாமை"

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
-என்ன்

இறைவா! இறைவா!!
துன்பமே இயற்கை எனும்
சொல்லை மறந்திடுவோம்
இன்பம் வேண்டி நிற்போம்
யாவுமவன் தருவான்.

என்பன போன்ற பாரதியாரின் வேதாந்தப் பாக்களோ யாவரும் எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடிய தெளிந்த நடையில் மிளிர்வதோடு படிக்கும் ஒவ்வொருவருக்கும் புத்துயிரளித்து உலக வாழ்வில் ஊக்கமும் விருப்பமும் உதித்தெழச் செய்து உலவுகின்றன.

(-வரும்)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponne East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday September 11th 1941.